# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

## CC.No.31/2025

Deposition of Witness of PW7

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ஜான்சன் பால் | Calling | : |
| Father/Husband's Name | : | | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 10th மார்ச் 2026.

எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.06.2023 அன்று ஓய்வு பெற்று தற்போது ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 02.02.2023 ம் தேதி பகல் 14.00 மணிக்கு மொடக்குறிச்சி காவல்நிலையத்தில் பணியில் இருந்துபோது மனோகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.16/2023 இதச பிரிவு 394 இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் வாக்குமூலத்தின் அசலையும் இணைத்து ஈரோடு நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு துரித தபால் மூலம் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக மொடக்குறிச்சி காவல்நிலைய ஆய்வாளர் திருமதி.தீபா என்பவரிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக என்னை காவல்நிலைய ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:39:31 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 31/2025**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Calling | : |
| Father/Husband's Name | : துரைசாமி | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 10th மார்ச் 2026.

எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஈரோடு லக்காபுரத்தில் வசித்து கொண்டு தறிப்பட்டறையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 22.03.2023 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு நானும், பெரியண்ணன் என்பவரும் எங்கள் சொந்த வேலையாக ஈரோடு செல்வதற்காக சோலார் முனியப்பன் கோவில் அருகில் சென்று கொண்டிருந்த போது மொடக்குறிச்சி போலீஸார் அங்கு நின்று கொண்டு வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தார்கள். எங்களது வாகனத்தையும் நிறுத்தி ஆவணங்களை கேட்டார்கள். அப்போது அங்கு வந்த ஒருநபரை பிடித்து போலீஸார் விசாரித்தார்கள், அவரது பெயர் குமரேசன் ஆகும்.அவரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். அவர் இன்று நீதிமன்றத்தில் இல்லை.

2. போலீஸார் அவரை விசாரித்த போது HP பெட்ரோல் பங்கில் இசக்கி பாண்டி என்பவருடன் சேர்ந்து பணத்தை திருடியதை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். போலீஸார் அதனை பதிவு செய்து எங்களிடம் சாட்சியாக கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி குமரேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.03.10 11:39:35 +0530

மேலும் அவர் தனது பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.47,000பணத்தை போலீஸார் மகஜரில் கைப்பற்றினார்கள்.

3. அதில் நானும், பெரியண்ணன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4ஆக குறியீடு செய்யப் படுகிறது.** போலீஸார் கைப்பற்றிய ரூ.47000 ரூபாய்களை பார்த்தால் என்னால் அடையாளம் தெரியும். அவைகள்ரூ.500 நோட்டுகளாக மொத்தம் 94 (500 x 94 = 47000) எண்ணிக்கை இருந்தது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்படுகிறது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:39:40 +0530

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No. 31/2025**

Deposition of Witness of PW5

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Calling | : |
| Father/Husband's Name | : ஆறுமுகம் | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 10th மார்ச் 2026.

எதிரிகள் ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்படுகிறது.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஈரோடு லக்காபுரத்தில் குடியிருந்து கொண்டு லக்காபுரம் ரிங் ரோட்டில் பரிசல்துறை காவேரி பாலம் அருகில் ஸ்ரீ ஜெயசக்தி டிரேடர்ஸ் என்ற HP பெட்ரோல் பங்க் வைத்து நடத்தி வருகிறேன். நான் தினமும் பெட்ரோல் பங்கிற்கு காலையில் ஒரு நேரமும், மாலையில் ஒரு நேரமும் வந்து செல்வேன். தினமும் இரவு 7.00 மணியளவில் வசூலாகும் தொகையை நான் வந்து வாங்கி மறுநாள் காலை வங்கியில் கட்டுவேன். கடந்த 01.02.2023ம் தேதி இரவு 9.20 மணிக்கு எனது பெட்ரோல் பங்கில் கேசியராக வேலை செய்யும் மனோகரன் என்பவரும், பம்ப் பாய் ராமகிருஷ்ணன் மற்றும் பாசில் ஆகியோரும் எனக்கு போன் செய்து இருசக்கர வாகனத்தில் 2 நபர்கள் எனது பங்கிற்கு வந்து கத்தியை காட்டி மிரட்டி மனோகர் கையில் இருந்து கேஸ் பேக்கை (பணப்பை) பிடிங்கி சென்றுவிட்டதாக சொன்னார்கள்.

2.அதில் ரூ.48,200/-பணம் இருந்ததாகவும் சொன்னார்கள். 02.02.2023 ம் தேதி இதுசம்பந்தமாக மனோகர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். ஒரு மாதம் கழித்து போலீஸார் எனது பங்கில் பணத்தை பறித்து சென்ற நபர்களை பிடித்து விட்டதாக என் பணத்தை கைப்பற்றி விட்டதாகவும் போன் மூலமாக தகவல் சொன்னார்கள். நான் நீதிமன்றத்தில் பின்னர் மனு செய்து போலீஸார்

VIJAYAKUMAR K Digitally signed by VIJAYAKUMAR K Date: 2026.03.10 11:39:46 +0530

கைப்பற்றிய ரூ.47,000/-பணத்தை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். மேற்படி தொகையை ரூ.500 நோட்டுகளாக நீதிமன்றத்தில் இருந்து பெற்றுக் கொண்டேன். மேற்படி பணம் தற்போது எடுத்துவரவில்லை. **படிவம் 91ல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.47000/-தொகை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப் படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் முடித்து வைக்கப்படுகிறது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 11:39:50 +0530